# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2158/17 - 2020 ජනවාරි මස 14 වැනි අඟහරුවාදා - 2020.01.14

*2158/17 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

*மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் கருமப் பணிகளை கௌரவ கமத்தொழில் இராஜாங்க அமைச்சர், கௌரவ நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், கௌரவ மகாவலி இராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கு ஒப்படைத்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சராகிய நான், எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்களையும் மற்றும் கரும பணிகளையும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த கருமப் பணிகளை நிறைவேற்றுவதற்கான பொறுப்புக்களையும் மற்றும் அதிகாரங்களையும் அரசியலமைப்பின் 44 (5) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க, கமத்தொழில் இராஜாங்க அமைச்சர் கௌரவ விதுர விக்ரமநாயக்க அவர்களுக்கும், நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்த்தன அவர்களுக்கும், மகாவலி இராஜாங்க அமைச்சர் கௌரவ ரொஷான் ரணசிங்க அவர்களுக்கும் ஒப்படைப்பதுடன், இந்த அமைச்சின் விடயப் பரப்பில் வருகின்ற சகல கருமங்களையும் ஒருங்கிணைத்து ஆராய்தல், தலையீடு செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் முதலிய வாய்ப்புக்கள் மேலும் குறித்த இராஜாங்க அமைச்சர்களுக்கு உண்டு எனவும் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*


1A - G 31808 — 377 (2020/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கருமப் பணிகளும் தொழிற்பாடுகளும்* | *திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *செயற்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. பயிர் பல்லினத்துவத்தின் அடிப்படையில் விவசாய உற்பத்திகளை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | 1. விவசாயத் திணைக்களம். | 1. விதை நெல் சட்டம் (2003 இன் 22 ஆம் இலக்க). |
| 2. பல விவசாயத் துறைகளில் ஈடுபடும் நபர்களுக்கு முறையான பயிற்சியை வழங்குதல், கல்வி மற்றும் ஆராய்ச்சி விஸ்தரிப்புக்கான திட்டங்களைத் தயாரித்தல். | 2. கமநல அபிவிருத்தித் திணைக்களம். | 2. மண் பாதுகாப்புச் சட்டம் (1996 இன் 24 ஆம் இலக்க). |
| 3. வயல் காணிகளை உச்சளவில் கொள்கைக்கான விவசாயப் பயிர்களுக்காக பயன்படுத்தும் வகையில் அத்தகைய காணிகள் தொடர்பான சகல கருமங்களையும் நிறைவேற்றுதல். | 3. தேசிய உர செயலகம். | 3. இலங்கை விவசாய ஆராய்ச்சி சபைச் சட்டம் (1987 இன் 47 ஆம் இலக்க). |
| 4. நச்சு நீங்கிய தூய உணவு, தூய உணவு உற்பத்திகளுக்கு பரீட்சயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை விஸ்தரித்து ஊக்குவித்தல். | 4. வ/ப இலங்கை உரக் கூட்டுத்தாபனம். | 4. பசளைகள் ஒழுங்குறுத்தும் சட்டம் (1988 இன் 68 ஆம் இலக்க). |
| 5. தரமான பசளைகளை இறக்குமதி செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை அரசாங்கத்தின் நிவாரணக் கொள்கை அடிப்படையில் வினைத்திறன் வாய்ந்த முறையில் செயற்படுத்துதல். | 5. கொழும்பு வர்த்தக உரக் கூட்டுத்தாபனம். | 5. கமநல அபிவிருத்திச் சட்டம் (2000 இன் 46 ஆம் இலக்க). |
| 6. இயற்கைப் பசளை உற்பத்தியையும் மற்றும் நச்சு நீங்கிய விவசாய உற்பத்திகளையும் பிரபல்யப்படுத்துதல். | 6. வ/ப ஜனதா பேர்ட்டிலைசர் என்டர்பிறைசெஸ். | 6. விவசாய கூட்டிணைந்த சட்டம் (1978 இன் 11 ஆம் இலக்க). |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கருமப் பணிகளும் தொழிற்பாடுகளும்* | *திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *செயற்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. தேசிய கொள்கைக்கு ஏற்ப நீர்ப்பாசன முறைமையை அபிவிருத்தி செய்தல். | 1. நீர்ப்பாசனத் திணைக்களம். | 1. நீர்ப்பாசன கட்டளைகள் சட்டம் (1946 இன் 22 ஆம் இலக்க). |
| 2. நீர்ப்பாசன மற்றும் நீர் வடிகாலமைப்பு முறைமைகளை நிர்மாணித்தல், முறையாகப் பராமரித்துத் தேவையான நீரை முறையாகப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தி வெள்ளப்பெருக்குகளையும் மற்றும் நீர் வழிந்தோடுவதையும் தடுப்பதற்குத் தேவைாயன நடவடிக்கைகளை எடுத்தல். | 2. கிராமிய புனர்வாழ்வு நிதியம் பற்றிய சட்டம். | 2. கால்நடைகளின் நோய்கள் சட்டம் (1992 இன் 59 ஆம் இலக்க). |
| 3. விவசாய அபிவிருத்திக்கு முந்துரிமை அளித்து கொள்கை அடிப்படையில், மின்சாரம் மற்றும் குடிநீர் என்பவற்றை வழங்குவதற்கு நீர்த்தேக்க வசதிகளை உரிய முறையில் நிருவகித்துப் பேணுதல். | 3. கிராமிய பொருளாதார புனர்வாழ்வு நிதியம் (நிதி). | 3. விலங்கு தீனிகள் சட்டம் (1986 இன் 15 ஆம் இலக்க). |
| 4. நீர் வசதியுடைய பிரதேசங்கள் மற்றும் ஆறுகள், நதிகள் என்பவற்றைச் சரியாக நிர்ணயித்து அவற்றை நிலைபெறுதகு விதத்தில் பாதுகாத்து அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | 4. ஜனதிரிய நிதியம் (கிராமோதய சபை நிதியம்). | 4. கால்நடைகள் சட்டம் (1958 இன் 29 ஆம் இலக்க). |
| 5. ஆறுகள், கால்வாய்கள், வாய்க்கால்கள், குளங்கள் முதலிய நீர் வளங்களை அண்மித்த சுற்றாடல் மாசடைவைத் தடுத்தல். | 5. கால்நடைகள் உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம். | 5. மிருக வைத்தியத் தொழில் சட்டம் (1956 இன் 46 ஆம் இலக்க). |
| | 6. தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபை. | |
| | 7. மில்கோ (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் இணைந்த கம்பனிகள். | |
| | 8. வ/ப மகாவலி லைவ்ஸ்டொக் என்டர்பிறைசெஸ். | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கருமப் பணிகளும் தொழிற்பாடுகளும்* | *திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *செயற்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 6. நீர் மாசடைவதைக் கட்டுப்படுத்துதல் மற்றும் நீரின் தரத்தைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் நிமித்தம் உபாயத் திட்டங்களைத் தயாரித்தல். | | |
| 7. நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல். | | |
| 8. கால்வாய் முறைமைகளைப் பாதுகாப்பதற்கான ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல். | | |
| 9. உவர் நீரை அகற்றும் திட்டத்தைச் செயற்படுத்துதல். | | |
| 10. நிலக்கீழ் நீர் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் மழை நீரைச் சேமித்தல் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களையும் மற்றும் கருத்திட்டங்களையும் தயாரித்துச் செயற்படுத்துதல். | | |
| 11. மண் வளங்களின் நிலையான பயனுள்ள பாவனையை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களையும் மற்றும் கருத்திட்டங்களையும் செயற்படுத்துதல். | | |
| 12. கால்நடை வளங்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல். | | |
| 13. கால்நடைகளின் சுகாதாரம் மற்றும் அதனுடன் சம்பந்தமான விடயங்களை மேற்கொள்ளல். | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கருமப் பணிகளும் தொழிற்பாடுகளும்* | *திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *செயற்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| *14. கால்நடை வளங்கள் மைய உற்பத்தியை ஊக்குவித்தல், பிரபல்யப்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றின் நிமித்தம் தேவையான நடவடிக்கையை எடுத்தல்.* | | |
| *15. நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கால்நடை வளங்கள் பிரிவு தொடர்பான ஆராய்ச்சிகளை விஸ்தரித்தல் மற்றும் ஆராய்ச்சிகளினது பெறுபேறுகளின் அடிப்படையில், உற்பத்திப் பிரிவைத் தரமாகவும் கணிய ரீதியாகவும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.* | | |
| *16. கால்நடைகள் பிரிவில் அவற்றின் இனத்தைப் பெருக்குவதற்கு விஞ்ஞான இனப்பெருக்கம் செய்யும் முறையைப் பிரபல்யப்படுத்துதல், அத்தகைய கால்நடைகளை நோய்களிலிருந்து பாதுகாத்தல் மற்றும் தொற்றுநீக்கிச் சேவைகளை வழங்குதல்.* | | |
| *17. கிராமிய மக்களின் வாழ்வை ஊக்குவிப்பதற்குப் பொருத்தமான உட்கட்டமைப்பு, நிதிசார் வசதிகள் மற்றும் ஜீவனோபாயம் முதலியவற்றை அபிவிருத்தி செய்வதனூடாகக் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான கிராமிய மற்றும் பிராந்திய பொருளதாதார அபிவிருத்திக் கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்.* | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**மகாவலி இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கருமப் பணிகளும் தொழிற்பாடுகளும்* | *திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *செயற்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. மகாவலி விவசாயக் குடியேற்றங்களின் அபிவிருத்தி விடயங்களைக் கவனித்தல். | 1. மொரகஹகந்த - களுகங்கை நீர்த்தேக்கத் திட்டம். | 1. நெற் சந்தைப்படுத்தல் சட்டம் (1971 இன் 14 ஆம் இலக்க). |
| 2. மகாவலி விவசாயக் குடியேற்றங்களின் மக்களது ஜீவனோபாயத்தைக் கட்டியெழுப்புவதற்கான கருத்திட்டத்தை ஒருங்கிணைத்தல். | 2. மகாவலி ஒன்றிணைந்த வலயம் (வலயம் "பி" புனரமைப்பு). | |
| 3. மகாவலி விவசாயக் குடியேற்றங்களை அண்மித்த பகுதிக் கருத்திட்டங்களைச் செயற்படுத்த உரிய நிறுவனங்களுக்கு உதவுதல். | 3. உமா ஓயா பல்கரும அபிவிருத்திக் கருத்திட்டம். | |
| 4. நெல், தானியங்கள் மற்றும் ஏனைய விவசாய உற்பத்திகளைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்துதல், பொதியிடுதல் மற்றும் விற்பனை முதலிய விடயங்களை மேற்கொள்ளல். | 4. நெற் சந்தைப்படுத்தும் சபை. | |

மேற்காட்டப்பட்டுள்ளவாறு கௌரவ இராஜாங்க அமைச்சர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கருமப் பணிகளும் தொழிற்பாடுகளும் எனது மேற்பார்வை மற்றும் அங்கீகாரத்துக்கு உட்பட்டதாகும்.

சமல் ராஜபக்ஷ,
மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும்
கிராமிய அபிவிருத்தி அமைச்சர்.

மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும்
கிராமிய அபிவிருத்தி அமைச்சு,
இல. 288, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை,
இராஜகிரிய,
2020, சனவரி 06.

01-701

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.